DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO.255/2017 PW 1

Name மல்லி

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

05.01.2024.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

(சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்)

எனது தந்தையின் பெயரில் பட்டா எண் 159ல் உள்ள பட்டா வாதசாஆ 1. 273 பட்டா எண்ணில் உள்ள எனது தந்தையில் பெயரில் உள்ள பட்டாவின் இணைய நகல் வாதசாஆ 2. எனக்கு பாகம் வழங்க கோரி வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய 01.06.2017 வழக்கறிஞரின் அறிவிப்பு அலுவலக நகல் வாசதஆ 3. ஒப்புதல் அட்டை வாதசாஆ 4. 2ம்பிரதிவாதி நடராஜனுக்கு அனுப்பிய அறிப்பு திருப்பட்டதற்கான தபால கவர் வாதசாஆ 5. 3ம் பிரதிவாதிக்கு சார்வான ஒப்புதல் அட்டை வாதசாஆ 6. 5ம் பிரதிவாதிக்கு அனுப்பட்டு திருப்பபட்ட தபால் கவர் வாதசாஆ 7. எனது தந்தையின் இறப்பு சான்று நகல் வாதசாஆ 8 ஆகும்.

**குறுக்கு விசாரணை 2ம் பிரதிவாதிக்காக**

மொத்தம் 13 ஏக்கர் எனது தகப்பனாருக்கு சொந்தமானது. சர்வே எண்கள் எனக்கு தெரியாது. என் கணவர் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். எப்போது எனக்கு திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனாரின் சுய சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்துக்கள் தாவாசொத்துக்களாகும். பிரதிவாதிகள் தரப்பில் என்ன எதிர் வாதுரையில் தாக்கல் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு உடன் பிறந்த

தம்பி ஒருவர் இருந்தார். அவர் பெயர் எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு பூர்விக சொத்து கிடையாது. என் தகப்பனார் எப்போது கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. வில்லங்க சான்று பெறவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் பதில்வாதுரை தாக்கல் செய்த பிறகும் நான் வில்லங்க சான்று பெறவில்லை. என் தகப்பனார் பெயரில் பட்டா வழங்கபப்ட்ட காரணத்தினால் அது அவருடைய சுய சம்பாத்திய சொத்து என்று கூறுகிறேன். எனது அப்பாவிற்க்கும் சித்தப்பாவிற்கும் பாகபிரிவினை நடந்ததா என்று எனக்கு தெரியாது. எனது அண்ணன் ராஜமணிக்கும் மற்றொரு அண்ணன் மாரிமுத்து, அடுத்து நான் எனக்கு அடுத்து நடராஜன் எனது பெற்றோருக்கு பிள்ளைகளாகும். இதில் ராஜமணிக்கும் மற்றும ் மாரிமுத்து இறந்துவிட்டார்கள். 3, 4 பிரதிவாதிகள் ராஜமணிக்கத்தின் மனைவி மற்றும் மகன் ஆகும். 5, 6 பிரதிவாதிகள் மாரிமுத்துவின் மனைவி மற்றும் மகன் ஆகும். எனது தாயார் செல்லம்மாள் முதல் பிரதிவாதி ஆகும். 1/5 தாவா சொத்தில் கோரியுள்ளேன். 1979 ல் எனது சித்தப்பா எனக்கு செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார். எனது தகப்பனார் சொத்தில் எந்த பங்கும் கிடைக்கவில்லை. எனது தகப்பனாருக்கும் அவருடைய தம்பிக்கும் ஏற்பட்ட பாகத்தில் எனது தகப்பனாருக்கு 3.57 ஏக்கர் ஒதுக்கபட்டது என்றால் சரியல்ல. 13 ஏக்கர் எனது தகப்பனாருக்கு சொந்தமானது. 3.57 ஏக்கர் சொத்தில் 92 சென்ட்டான 1/5ல் ஒரு பாகத்தை என் பெயருக்கு என் தகப்பனார் 24.10.1979ல் செட்டில்மென்ட் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல. அந்த செட்டில்மென்ட் பத்திரத்தில் எனது தகப்பனார் கையொப்பம் செய்தாரா அல்லது சித்தப்பா கையோப்பம் செய்தாரா என்று தெரியவில்லை. அந்த பத்திரத்தை நான் தாக்கல் ் செய்கிறேன்.

(ஆவணத்தை தாக்கல் செய்ய வேண்டி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)